Registered as a Newspaper
பக்கங்கள் 16 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 54
வெள்ளிக்கிழமை
19 ஜனவரி 2024
தை 05 ஆம் நாள்
2055

முச்சந்தி முரளி



"எந்தப்பக்கம் திரும்பினாலும் தேர்தல் கண்ணிவெடியளாத்தான் கிடக்கு. கவனமா இருக்கோணும் கண்டியளோ"



## ஜனாதிபதித் தேர்தல் ஒக்ரோபர் 16?



கொழும்பு, ஜனவரி 19

ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி அல்லது அதற்கண்மைய ஓரிரு நாள் இடைவெளியில் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படலாம் என்று கருதப்படுகின்றது. 15

ஊதிய உயர்வுகோரி

## பல்கலை ஊழியர்கள் நேற்றுப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 19

ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வடமாகாணப் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். 15

அலம்பில்

## மாவீரர் துயிலுமில்லக் காணியை சுவீகரிக்க இராணுவம் முயற்சி!

கொழும்பு, ஜன. 19

முல்லைத்தீவு - அலம்பில் மாவீரர் துயிலுமில்லக் காணியை இராணுவத்துக்காகச் சுவீகரிப்பதற்கு நேற்று எடுக்கப்பட்ட முயற்சி பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் எதிர்ப்பையடுத்து கைவிடப்பட்டது. இராணுவத்தின் 23ஆவது சிங்க ரெஜிமெண்ட் பிரிவினருக்கு துயிலு 15

## தமிழரசின் தலைமைக்கான தேர்தலைக் குழப்பச் சதி?

சீ.யோகேஸ்வரன் சந்தேகம்



யாழ்ப்பாணம், ஜன. 19

தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தல் நெருங்கிவரும் நிலையில், தேர்தலைக் குழப்பச் சதி நடவடிக்கைகள் இடம்பெறுகின்றனவா? எனச் சந்தேகம் ஏற்படுகின்றது என்று தெரிவித்துள்ளார் தமிழரசுக் கட்சியின் தலைவர் தேர்தலுக்கான வேட்பாளர்களில் ஒருவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரு 15

## உதயன் குழுமத்தலைவரின் தாயார் நேற்றுக் காலமானார்



யாழ்ப்பாணம், ஜன. 19

உதயன் குழுமத்தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவனின் தாயார் திருமதி வசந்தரூபா ஈஸ்வரபாதம் நேற்றுக் காலமானார்.

கடந்த சில மாதங்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த அவர் தனது 95 ஆவது வயதில் கோப்பாய் இராசபாதையிலுள்ள இல்லத்தில் நேற்று இயற்கை எய்தினார். (ம)

## ரயில் விபத்து: ஒருவர் இறப்பு!

கிளிநொச்சி, ஜன. 19

கிளிநொச்சி - அறிவியல்நகர் பகுதியில் ரயிலோடு 15

## 24,000 போதை மாத்திரைகள்: ஒருவர் நேற்றுக் கைது

மன்னார், ஜன. 19

மன்னார், தாழ்வுபாடு பகுதியில் உள்ள காணியொன்றுக்குள் இருந்து பெருமளவான போதை மாத்திரைகள் மீட்கப்பட்டதுடன், 15

## 143 கிராம் ஹெரோய்ன்: குற்றவாளிக்கு ஆயுட்சிறை

கிளிநொச்சி, ஜன. 19

கிளிநொச்சி - போராலைப் பகுதியில் 143 கிராம் ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்ட குற்றவாளிக்கு கிளிநொச்சி மேல் நீதிமன்றம் ஆயுட்கால சிறைத்தண்டனை விதித்து உத்தரவிட்டது. 15

## புதிய விசா நடைமுறை விரைவில் அமுலுக்கு!

விரிவு - பக்.15

## சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்று ஆரம்பமாகின்றது

யாழ். முற்றவெளியில் மக்கள் திரள்வர்

விரிவு - பக்.15




## சிறுமிக்குப் பாலியல் துன்புறுத்தல் பூசாரிக்கு 12 ஆண்டுகள் கடூழியம்

கிளிநொச்சி, ஜன. 19

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், சிறுமியொருவரைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்திய பூசாரிக்கு 12 ஆண்டுகால கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தாபய ஆட்சிக்காலத்தில் திரவ உர இறக்குமதி மோசடி

## விசாரணைகள் ஆரம்பம்

**கொழும்பு, ஜன.19**

**கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் இரட்டிப்பு பெறுமதியில் திரவ உரம் இறக்குமதி மூலம் சுமார் 71 கோடி ரூபா மோசடி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் உரத் தட்டுப்பாட்டை நீக்கும் தற்காலிக ஏற்பாடுகளில் ஒன்றாக திரவ இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. முறையான கேள்வி கோரல் இன்றி இந்தியாவின் நிறுவனமொன்றிடமிருந்து திரவ உரம் பெருமளவில் இலங்கைக்கு இறக்குமதிசெய்யப்பட்டிருந்தது. வெறும் ஐந்து அமெரிக்க டொலர் பெறுமதி கொண்ட திரவ உர போத்தல் ஒன்றை இறக்குமதி செய்வதற்காக முதற்கட்டமாக 12. 5 டொலர் வீதமும், இரண்டாம் கட்டமாக 10 டொலர் வீதமும் அரசாங்க நிதி செலவிடப்பட்டிருந்தது. உண்மையான சந்தைப் பெறுமதியை விட இரட்டிப்பு விலையில் திரவ உரம் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. இதுதொடர்பான தகவல்கள் கிடைத்தவுடன் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதுதொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் என்பன விசாரணைகளை ஆரம்பித்துள்ளன - என்றார். (எ-இ)

# மரண அறிவித்தல்



## திருமதி வசந்தரூபா ஈஸ்வரபாதம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு நந்தாவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி வசந்தரூபா ஈஸ்வரபாதம் அவர்கள் 18.01.2024 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

# கரட்டுக்கு கிராக்கி கிலோ ரூ.1800!



யாழ்ப்பாணம், ஜன. 19
யாழ். குடாநாட்டில் உள்ளூர் கரட்டுகளுக்கு கிராக்கி அதிகரித்துள்ளது.
தற்போது சந்தையில் ஒரு கிலோ கரட் 1500 ரூபா முதல் 1800 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றன. தென்பகுதியிலிருந்து கரட் எடுத்து வரப்படாத நிலையில் குடாநாட்டு கரட்டுகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது என்றும் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-17)


# 943 பேர் கைது

கொழும்பு, ஜன.19
நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் சோதனை நடவடிக்கையின் கீழ் நேற்றுக்காலையுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் 943 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 9 பேர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும், 25 பேர் மறுவாழ்வு மையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

# மருத்துவமனையில் சேர்ந்தார் துமிந்த!

கொழும்பு, ஜன.19
தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் துமிந்த சில்வா கொழும்பு ஜயவர்த்தனபுர மருத்துவ மனையில் சத்திர சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.
மருத்துவர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் துமிந்த சில்வா, சிகிச்சை பெற்று வருகின்றார் என்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.
மருத்துவர்களின் பரிந்துரைகள் மீண்டும் கிடைத்ததும் அவர் மருத்துவமனையில் இருந்து சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்படுவார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி பொது மன்னிப்பு சட்டவிரோதமானது எனவும், அவருக்குத் தூக்குத்தண்டனையை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் சிறப்புத் தீர்ப்பொன்றை வழங்கியுள்ளது. (எ-இ)

# 15 நாள்களில் 5,892 பேருக்கு டெங்கு



கொழும்பு, ஜன.19
நாடளாவிய ரீதியில் இந்த ஆண்டின் முதல் 15 நாள்களில் மட்டும் 5 ஆயிரத்து 892 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.
இவர்களில் ஆயிரத்து 956 டெங்குத் தொற்றாளர்கள் மேல்மாகாணத்தில் இனங்காணப்பட்டுள்ளனர். அதேவேளை, கடந்த ஆண்டு 86 ஆயிரத்து 232 டெங்குத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். (எ)

# மின் கட்டணத் திருத்தம்; மக்கள் கருத்தறியத் திட்டம்

கொழும்பு, ஜன.19
மின்கட்டணத் திருத்த யோசனை தொடர்பில் அடுத்த வாரம் முதல் பொதுமக்களிடம் கருத்துகளைக் கேட்டறியத் திட்டமிடப்பட்டுள்ளது. மின்சாரக் கட்டணத் திருத்த யோசனை, இலங்கை மின்சார சபையால் இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கு உட்பட்டு மின்கட்டணத் திருத்தம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-இ)

# வரிப்பதிவு இலக்கம் பெற ஏப்ரல்வரை காலஅவகாசம்

கொழும்பு, ஜன.19
தனிநபர் வரிப்பதிவு இலக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கான இறுதித்திகதி ஏப்ரல் முதலாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது.
முன்னதாக பெப்ரவரி முதலாம் திகதிக்கு முன்னர் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் தனிநபர் வரிப்பதிவு இலக்கத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்திருந்தது.
வங்கிகளில் நடைமுறைக்கணக்கு ஆரம்பித்தல், கட்டட அனுமதி, வாகனக் கொள்வனவு, விற்பனை, வாகனப் பதிவு, வாகன அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல், காணி உரிமம் போன்ற சகல செயற்பாடுகளுக்கும் தனி நபர் வரிப்பதிவு இலக்கம் அவசியம் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் வாக்குகளுக்காக காட்டிக்கொடுக்கும் ரணில்



## விமல் வீரவன்ஸ கடும் தாக்குதல்

**கொழும்பு, ஜன. 19**

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் வாக்குகளைப் பெறுவதற்காக ரணில் விக்கிரமசிங்க இராணுவத்தினரைக் காட்டிக்கொடுக்கும் சட்டங்களை கொண்டுவர முயற்சிக்கின்றார். சரத் பொன்சேகாவைத் தவிர ஏனைய இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் வகையில் உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.**

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ.

இந்தச் சட்டவரைவுக்கு அமைய ஆணைக்குழு உருவாக்கப்பட்டால் தற்போது நடைமுறையில் உள்ள சாட்சிக் கட்டளைச் சட்டம் வலுவிழக்கப்படும். இராணுவத்தினருக்கு எதிராக எவர் வேண்டுமானாலும் குற்றச்சாட்டுகளை முன்வைக்கலாம், பொய்ச்சாட்சியம் வழங்கலாம். தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு செயற்படுகின்றார். ஆச்சரியம் என்னவென்றால், போர் வெற்றியை பிரதான தேர்தல் பிரசாரமாகக் கொள்ளும் ராஜபக்சக்கள் இராணுவத்தினருக்கு எதிரான சட்டவரைவுகளுக்கு ஆதரவாகச் செயற் படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-இ)

## எடப்பாடியுடன் ஜீவன் சந்திப்பு

கொழும்பு, ஜன. 19

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், தமிழக எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடிபழனிச்சாமியை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு எடப்பாடி பழனிச்சாமியின் "செல்வந்தி" இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களுக்காக நடத்தப்பட்ட 'நாம் - 200' நிகழ்ச்சி குறித்து அமைச்சர் ஜீவன் தொண்டமான் விளக்கினார். (ச-இ)

## சபாநாயகர்கள் சந்திப்பு

கொழும்பு, ஜன. 19

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் அழைப்பில் இலங்கைக்கு வருகை தந்துள்ள மாலைதீவு சபாநாயகர் மொஹமட் அஸ்லம் தலைமையிலான தூதுக்குழு வினருக்கும் சபாநாயகருக்குமிடையிலானசந்திப்பு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போது இரு நாட்டு நாடாளுமன்றங்களுக்கிடையில் நெருங்கிய தொடர்புகளை எதிர்காலத்தில் பேணுவதற்கு எதிர்பார்ப்பதாக மாலைதீவு சபாநாயகர் தெரிவித்தார்.

அத்துடன் இரு நாட்டு நாடாளுமன்றங்களிலுமுள்ள குழு முறைமை மற்றும் சட்டவாக்கச் செயன்முறை தொடர்பிலும் இரு தரப்பினரும் கலந்துரையாடினர். (ச-இ)

## தேவையற்ற செலவினத்தை குறைக்குமாறு சுற்றறிக்கை

கொழும்பு, ஜன.19

இந்த ஆண்டு தேவையற்ற அனைத்துச் செலவினங்களையும் நிறுத்தவேண்டும் என்று அனைத்துத் திணைக்களங்களுக்கும் திறைசேரி சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளது. மேலதிக நேரக் கொடுப்பனவு, போக்குவரத்துப்படி மற்றும் இதர படிகளை நிறுத்தவேண்டும் என்று அந்தச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஏ-6)

## சிறையில் மற்றொரு கைதி சாவு!

களுத்துறைச் சிறைச்சாலையில் நேற்று வியாழக்கிழமை மற்றுமொரு கைதி உயிரிழந்துள்ளார் என்று களுத்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதேவேளை இரண்டு வாரங்களுக்கு முன்னர் 4 நாள்களில் 3 கைதிகள் உயிரிழந்திருந்தனர் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

## மாணவரின் போராட்டத்தை தடுத்ததால் பெரும் பதற்றம்

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியைக் கலைப்பதற்குப் பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டதால் பதற்ற நிலை ஏற்பட்டது. (ஏ-44)

# ஈரல் அழற்சிக் கட்டுப்பாடு; இலங்கை, மாலைதீவு வெற்றி

## உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவிப்பு!

கொழும்பு, ஜன. 19

சிறுவர்களிடையே ஏற்படும் ஈரல் அழற்சி நோயைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை, மாலைதீவு வெற்றியடைந்ததாக உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில் இலங்கையில் 90 வீத சிறுவர்களுக்கு ஈரல் அழற்சி தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.

தெற்காசிய நாடுகளில் ஈரல் அழற்சி நோயைக் கட்டுப்படுத்துவதில் இலங்கையும், மாலைதீவும் முன்னணியில் திகழ்வதாக உலக சுகாதார ஸ்தாபனம் கடந்த புதன்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஈரல் அழற்சி தடுப்பூசி ஏற்றப்பட்டதனால் தாயிலிருந்து குழந்தைக்குத் தொற்றும் ஈரல் அழற்சி நோய் கட்டுப்படுத்தப்பட்டதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் தெற்காசியப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ரி-6)



# புதினம் தெரியுமோ?

**'இந்த நீதிமன்றம் விசித்திரம் நிறைந்த பல வழக்குகளைச் சந்தித்திருக்கிறது ' எண்டு தொடங்கி மூச்சுவிடாமல் ஒரு மூண்டு பக்க வசனத்தை சிவாஜி சொல்லி நடிச்சிருப்பார். அப்பிடியான விசித்திரமான கேஸ் ஒண்டு யாழ்ப்பாண பொலிஸ் ஸ்ரேசனுக்கு வந்திருக்கு. வடமராட்சியில இருந்து வெளிநாட்டுக்குப் போன ஒருத்தர் தான் அப்பிடியொரு கேஸோட வந்திருக்கிறார். அப்பிடியென்ன விசித்திரமான கேஸ்?**

**அந்த வெளிநாட்டுக்காரருக்கு கலியாணம் கட்டி, ஒரு பிள்ளையும் இருக்கு. ஆனால் மனுசி ரண்டு வருசத்துக்கு முதல் செத்திட்டா. ஆள் ரண்டாம் கலியாணம் கட்ட கன இடங்களில பொம்பிளை பார்த்தும் சரி வரேலை. இந்த நேரத்தில ஒரு குறிப்பும் படமும் புறோக்கர் ஒருத்தர் அனுப்பியிருக்கிறார். குறிப்பும் பொருத்தம், பொம்பிளையும் படத்தில வடிவா இருந்திருக்கு. ஆனால் படத்தைப் பார்த்து நம்பேலாது எண்டதால உடனேயே ஊருக்கு நேரில போய், பொம்பிளையைப் பார்த்து ஒக்கே எண்டால் கட்டிறதெண்ட முடிவோட ஆள் வந்திருக்கு. 'அண்ணை,, பொம்பிளையாக்களை யாழ்ப்பாணத்தில இருந்து வெள்ளவத்தைக்கு வரச்சொல்லுங்கோ. அங்கையே பார்த்து ஒக்கே எண்டால் உடனேயே கலியாணவீட்டு அலுவல்களைப் பாக்கலாம்' எண்டு புறோக்கருக்குச் சொல்லிப்போட்டு பறந்தடிச்சு வந்திருக்கிறார்.**

**எயார்போட்டால வெளிநாட்டுக்காரர் வந்திறங்கின அண்டைக்கே, வெள்ளவத்தைக் கோயில் ஒண்டில பொம்பிளை பார்க்கிற படலம் நடந்திருக்கு. நல்ல வெள்ளையான, வடிவான பொம்பிளை. வடிவெண்டா வடிவு அப்பிடியொரு வடிவு. வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு பார்த்த உடனேயே பொம்பிளையைப் பிடிச்சுப் போட்டுது. உடனேயே கலியாணத்தை வைக்கவேணுமெண்டு மாப்பிள்ளை ஒற்றைக்காலில நிண்டிருக்கிறார். பொம்பிளை வீட்டுக்காரரும் அதுக்கு ஓமெண்டிருக்கினம். மாப்பிள்ளைக்கு இது ரண்டாம் கலியாணம் எண்டதால, நெருங்கின ஒண்டிரண்டு சொந்தக்காரரோட சரியான சிம்பிளா தாலிகட்டு முடிஞ்சிருக்கு. அடுத்தநாள் ரெஜிஸ்ரேசன் வைக்கிறதெண்டும் ஏற்பாடு.**

**தாலிகட்டு முடிஞ்சு அடுத்தநாள் விடியப்பிறம் கண்முழிச்சுப் பார்த்த மாப்பிள்ளைக்கு கடும் 'ஷொக்'. அவரும், புது மனிசியும் இருந்த அந்த ரூமுக்குள்ள ஆரோ ஒரு பொம்பிளை நிண்டிருக்கு. மனுசியைக் காணேலை. 'ஆர் நீ? எங்கட ரூமுக்க உனக்கென்ன வேலை?'எண்டு அவர் கேக்க, 'நான் தான் உங்கட வைய்..ப்'எண்டு அந்தப் பொம்பிளை சொல்லியிருக்கு. பிறகுதான் ஆளுக்கு விசயம் விளங்கியிருக்கு. கடும் மேக்கப் போட்டு, பொம்பிளையின்ர உருவம், நிறம், தலைமுடி எல்லாத்தையும் மாத்தி இவரை நம்பவைச்சு, பொம்பிளையைக் கட்டிக் குடுத்திருக்கினம். அவர் பார்த்த பொம்பிளைக்கும் இப்ப முன்னால நிக்கிற பொம்பிளைக்கும் துளியும் சம்பந்தமேயில்லாம இருந்திருக்கு. ஆள் அலறித்துடிச்சுக் கொண்டு, யாழ்ப்பாணத்துக்கு ஓடிவந்து, பொலிஸில மோசடிக் குற்றச்சாட்டில கேஸ் போட வந்திருக்கிறார். மேக்கப்காரி, புறோக்கர், பொம்பிளை, இந்த மூண்டு பேரிலையும் கேஸ்போடோணும் எண்டு நிண்டிருக்கிறார். ஆனால் இதுமாதிரி விசித்திரமான கேஸை இதுவரைக்கும் இலங்கையில எந்த பொலிஸ் ஸ்ரேசனும் சந்திக்கவேயில்லை எண்டதால, 'எந்த செக்சனில இந்தக் கேஸை எடுக்கிறது?' எண்டு தெரியாமல் பொலிஸ்காரர் இன்னமும் முழுசிக் கொண்டிருக்கினமாம்.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்

யாழ்ப்பாணம், ஜன. 19

தென்மராட்சிப் பிரதேச செயலக கலாசார அதிகாரசபையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச-9)



# பிரிவுபசார நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 19

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி ஓய்வுபெற்று இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களுக்கான பிரிவுபசார நிகழ்வு அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் 46 உத்தியோகத்தர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (ச-9)

# திருப்புகழ் முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன. 19

உலக நன்மைகருதி விடத்தற்பளை வயலூர் அலங்காரக் கந்தசுவாமி கோயில் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை திருப்புகழ் முற்றோதல் நிகழ்வு ஆரம்பமாகி எதிர்வரும் 25ஆம் திகதி தைப்பூசத் தினத்தன்று நிறைவுறவுள்ளது.

நிகழ்வில் முருக பக்தர்கள் பங்கேற்று திருப்புகழ் பாடல்களை பாராயணம் செய்து அருள்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஜன. 19

கொழும்பு, நியூலங்கா மகப்பேற்று மருத்துவ நிலையத்தைச் சேர்ந்த மகப்பேற்று பெண் நோயியல் மருத்துவ நிபுணர் ஜி.சுஜாகரன் தாமதமடையும் குழந்தைப் பாக்கியத்துக்கான சிகிச்சை முறைகள் தொடர்பான இலவச மருத்துவ ஆலோசனைகளை ஜ.வி.எப். கிளினிக்முதலாம்ஒழுங்கை, பருத்தித்துறை வீதி யாழ் நகரில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப 10 மணி முதல் மாலை 6மணி வரை வழங்கவுள்ளார். (ரி)



நீர்வேலி, கந்தசுவாமி கோவிலில் தைத்திருநாளை முன்னிட்டு நீர்வேலி கந்தன் அடியார்கள் அனைவரும் கந்தசுவாமி கோவில் முன்றிலில் ஒன்று கூடி சக்கரைப் பொங்கல் பொங்கி வழிபாட்டில் ஈடுபட்டனர். (எ-17)

## திருமறைக்கலாமன்ற கலைநிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், ஜன. 19

தைத்திருநாளை சிறப்பிக்கும் வகையில் திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வருகின்ற பொங்கல் விழாவின் இரண்டாம் பகுதி நாளை சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்திலுள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் பங்கேற்கவுள்ளார். கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவிகளின் கிராமிய நடனம்,திருமறைக் கலாமன்ற இசைக் கலைஞர்களின் பொங்கல் பாடல்கள், மன்ற நாடகப் பயிலக மாணவர்களின் 'இதுவும் கடந்து போகும்' நாடகம் மற்றும் ஜொணி மதுரநாயகம்,தர்மினி றஜீபன் ஆகியோரின் கவிதை என்பன நிகழ்வை சிறப்பிக்கவுள்ளன. (ச)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். மற்றவர்களுக்காக நியாயம் கேட்கப் போய் பெயரை கெடுத்துக் கொள்ளாதீர்கள். புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். விட்டுக்கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**இடபம்:** எதிர்காலம் பற்றிய வீண் பதற்றம் வந்து செல்லும். அலட்சியம் வேண்டாம். வியாபாரத்தில் போராடி இலாபம் ஈட்டுவீர்கள். சக ஊழியர்களால் பிரச்சினைகள் வரக்கூடும். பொறுமை தேவைப்படும் நாள். தொட்டது துலங்கும் நாள்.

**மிதுனம்:** எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். நண்பர்களால் ஆதாயம் பெருகும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். இலாபம் பெருகும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**கடகம்:** வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள். தொழிலில் இலாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டு.

**சிம்மம்:** பிணக்குகள் நீங்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதியவர்களின் நட்பால் உற்சாகம் அடைவீர்கள். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும்

**கன்னி:** சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். குடும்பத்தில் உள்ளவர்களுடன் வளைந்து கொடுத்து போவது நல்லது. உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் பிரச்சினை வந்து நீங்கும். வேலைச்சுமை மிகுந்த நாள். திடீர்த் திருப்பம் நிறைந்த நாள்.

**துலாம்:** உங்கள் பேச்சு மதிப்பளிப்பார்கள். தாயாரின் உடல்நலம் சீராகும். கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.

**விருச்சிகம்:** அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். திடீர் யோகம் கிட்டும் நாள். வியாபாரத்தை பெருக்குவீர்கள்.

**தனுசு:** உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். ஆதரவு பெருகும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நட்பால் ஆதாயம் உண்டு. உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**மகரம்:** திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர்செய்வீர்கள். குடும்பத்தில் மனஸ்தாபம் நீங்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**கும்பம்:** உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். அரசால் ஆதாயம் உண்டு. துணிச்சலாக சில முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**மீனம்:** கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். குடும்பத்தில்அமைதி திரும்பும். வீண்வாதங்களில் ஈடுபட வேண்டாம். செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள்.

## எழுத்துக்கூட்டல் ஆங்கிலப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 19

மறுமலர்ச்சி மன்றம் நடத்தும் மாணவர்களுக்கான ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது.

நான்கு பிரிவுகளாக இந்தப் போட்டி நடத்தப்படவுள்ளது. போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் விவரங்களை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர், காலையடி மறுமலர்ச்சி மன்றத்தில் நேரடியாகவோ அல்லது 0770027621 என்ற 'வட்சப்' இலக்கத்துக்கோ அனுப்பிவைக்கலாம். (ச)

## யோகாசனப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஜன. 19

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையால் யோகாசனப் பயிற்சிநெறி வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காலை 8 மணி தொடக்கம் 9 மணிவரை நடத்தப்படவுள்ளது. நாளை சனிக்கிழமை இந்தப் பயிற்சிநெறி ஆரம்பமாகவுள்ளது.

பங்கேற்க விரும்புபவர்கள் வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் விண்ணப்படிவத்தை பெற்று பதிவுகளை மேற்கொள்ளலாம்.

இலவசமாக வழங்கப்படும் இந்தப் பயிற்சிநெறியில் பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது என்றும் பிரதேசசபை அறிவித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மன்னிப்பும் எதிர்பார்ப்பும்

இலங்கையின் வரலாற்றில் முதன்முறையாக ஜனாதிபதி ஒருவரால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பை சட்டவிரோதமானது என்று கூறி, அந்தப் பொதுமன்னிப்பை இரத்துச் செய்திருக்கிறது உயர்நீதிமன்றம். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திரவை சுட்டுக்கொன்ற குற்றச்சாட்டில் மரணதண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வாவுக்கே, 2021இல் அப்போது ஜனாதிபதியாக இருந்த கோத்தாபய ராஜபக்ச இந்தப் பொதுமன்னிப்பை வழங்கியிருந்தார். கோத்தாபயவை ஆட்சிக்குக் கொண்டுவந்ததில், துமிந்த சில்வாவின் சகோதரர் ரெய்னோ சில்வாவும் அவரது ஊடகங்களும் பெரும்பங்காற்றியிருந்தன. அதற்குப் பிரதியுபகாரமாகவே இந்தப் பொதுமன்னிப்பு துமிந்தவுக்கு வழங்கப்பட்டது. ஆனால் இந்தப் பொதுமன்னிப்பை, கொல்லப்பட்ட பாரத லக்ஸ்மனின் குடும்பத்தார் அவ்வளவு சாதாரணமாகக் கடந்துவிடத் தயாரில்லை. துமிந்த சில்வாவுக்கு வழங்கிய பொதுமன்னிப்பைக் கேள்விக்குட்படுத்தி, உயர்நீதிமன்றத்தில் வழக்குத்தொடரப்பட்டது. இலங்கையின் மிகமுக்கியமான சட்டத்தரணிகளை இந்த வழக்கில் வாதாடுவதற்காகக் களமிறக்கினார் பாரத லக்ஸ்மனின் மகளான ஹிருணிகா. அதன் விளைவாக, இப்போது கோத்தாபயவின் முகத்தில் கரியைப் பூசிய வரலாற்றுத் தீர்ப்பு, துமிந்தவின் பொதுமன்னிப்பை தூக்கியெறிந்திருக்கிறது. மீண்டும் சிறைக்குள் துமிந்த, மரணதண்டனைக் கைதியாகக் காலத்தைக் கழிக்கவேண்டும். இதிலிருந்து தற்காலிகமாகத் தப்புவதற்காக வழக்கம்போல, திடீர்நோயாளியாக மருத்துவமனையில் தஞ்சம் புகுந்துள்ளார் துமிந்த. ஆயினும் என்னதான் நோயாளி வேடம் போட்டாலும் துமிந்த விரைவில் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் செல்வது உறுதி.

அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும். அன்று ஆட்சியாளராக இருந்த கோத்தாபய வழங்கிய சட்டத்துக்கு முரணான பொதுமன்னிப்பை, தெய்வத்துக்கு நிகரான நீதிமன்றம் நிராகரித்திருப்பது இலங்கையின் நீதித்துறையின் மீது மீண்டுமொருமுறை நம்பிக்கை கொள்ள வைத்திருக்கிறது. ஆனால் இதே நீதியின் தராசு எப்போதும் ஒரே விதமாக நியாயத்தை அளவிட்டாலேயே அதுகுறித்து தமிழ்மக்கள் திருப்தி கொள்ளமுடியும். துமிந்தவைப் போலவே இன்னும் சிலருக்கும் கோத்தாபய பொதுமன்னிப்பை வழங்கியிருந்தார். அவர்களில் ஒருவர் இராணுவ அதிகாரியான சுனில் ரத்நாயக்க. துமிந்தசில்வா கணநேர கோபம் காரணமாகவே, தன் சக நாடாளுமன்ற உறுப்பினரைக் கொலை செய்திருந்தார். ஆனால் சுனில் ரத்நாயக்க அப்படியல்ல. யாழ்ப்பாணம், மிருசுவிலில் தங்கள் வீட்டினைப் பார்வையிட வந்த சிறுவன் உள்ளிட்ட அப்பாவிப்பொதுமக்கள் எட்டுப்பேரை கொடூரமாகச் சித்திரவதை செய்து, மலக்கிடங்கினுள் போட்டுக் கொலை செய்திருந்தார். இந்த மனிதமற்ற ஈனச்செயல் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதால் தான், அவருக்கு மரணதண்டனையும் விதிக்கப்பட்டது. மனுக்குலத்துக்கே விரோதமான படுபாதகக் கொலைகளைப் புரிந்த சுனில் ரத்நாயக்கவும் பொதுமன்னிப்பை வழங்கி, தனக்கு வாக்களித்த 69 இலட்சம் பேரினவாதிகளுக்கும் தன் இனவிசுவாசத்தை கோத்தாபய நிரூபித்திருந்தார். இந்தப் பொதுமன்னிப்பையும் கேள்விக்குட்படுத்தி தமிழர்தரப்பில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு வெறிபிடித்த மிருகத்தைப் போல ஏதுமறியா அப்பாவிகள் எட்டுப்பேரைக் கொன்ற கொடூரனை, நிறைவேற்றதிகாரம் என்ற சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தி மரணதண்டனையில் இருந்து தப்பிக்கவைத்திருந்தார் கோத்தாபய. துமிந்தவை விடவும் சுனில் ரத்நாயக்கவின் குற்றம் அதிபயங்கரமானது. கோத்தாபயவால் மன்னிப்பளிக்கப்பட்ட ஒரு மரணதண்டனைக் கைதியான துமிந்தவின் விடுவிப்பை நிராகரித்ததைப் போன்று, சுனில் ரத்நாயக்கவுக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பையும் இலங்கையின் நீதிக் கட்டமைப்பு நிராகரிக்குமா என்பதே இப்போதைய கேள்வி



# காலநிலை மாற்றங்களால் தெங்குச்செய்கை பாதிப்பு

### விலை அதிகரிக்கும் அபாயம்

**கொழும்பு, ஜன.19**

**இலங்கையில் கடந்த சில நாள்களாக தேங்காய் விலை அதிகரித்து வருகின்றது என்று தெங்கு விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.**

தென்னை அபிவிருத்திச்சபையின் கூற்றுப்படி, ஆண்டு முழுவதும் சுமார் ஆயிரத்து 500 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், சுமார் 28 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையும் தென்னை அறுவடைக்குத் தேவை.

ஆனால், கடந்த சில மாதங்களாக நாட்டின் பல பகுதிகளில் கனமழையும், சில பகுதிகளில் மிகவும் வறண்ட வானிலையும் காணப்பட்டது. மோசமான வானிலையால் தென்னை அறுவடை குறைந்துள்ளது.

அறுவடைகுறைந்துள்ளமையால் தேங்காய் விலை வெகுவாக உயர்ந்துள்ளது. எதிர்வரும் மே மாதத்துக்குள் படிப்படியாக இந்த நிலை சீராகும் என தென்னை விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தேங்காய் அறுவடை குறைந்துள்ளமையால் சந்தையில் தேங்காய்க்கான கேள்வி அதிகரித்துள்ளது. இதனால் 70, 80 ரூபாவாக இருந்த சிறிய தேங்காய் ஒன்றின் விலை தற்போது 100 ரூபாவை எட்டியுள்ளது.

100 ரூபா அல்லது அதற்கு மேலதிகமாக விற்பனை செய்யப்பட்ட பெரிய தேங்காய் ஒன்றின் விலை தற்போது 120 ரூபாவைத் தாண்டியுள்ளது. எதிர்காலத்தில் விலைகளில் அதிகரிப்பு ஏற்படும் என தென்னை விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-இ)

## ஐ.தே.க. மாநாடு ஒத்திவைப்பு

ஐக்கிய தேசியக் கட்சி இன்று வெள்ளிக்கிழமை கொழும்பில் நடத்தவிருந்த பொதுக்கூட்டம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க மற்றும் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் அவசர வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் சூழல் எழுந்தமையாலேயே இந்த முடிவை அந்தக் கட்சி எடுத்துள்ளது. (எ-இ)

## மதுப்பிரியர்களது தளமாக மாறும் முனீஸ்வரன் வீதி!

யாழ்ப்பாணம், ஜன. 19

யாழ்.நகரிலுள்ள முனீஸ்வரன் வீதியில் மதுப்பாவனையாளர்கள் அதிகரிப்பதால் அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்க நேரிடுகிறது என்று மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சிலர் மதுவை அவ்விடத்திலேயே வைத்து அருந்திவிட்டு போத்தல்கள் மற்றும் ரின்களை அருகிலுள்ள கால்வாயினுள் வீசிவிட்டுச் செல்கின்றனர். இதனால் சுகாதாரச் சீர்கேட்டுடன் துர்நாற்றமும் எழுகிறது.

எனவே குறித்த வீதியில் சமூகச் சீரழிவைத் தடுப்பதற்கு உரிய அதிகாரிகள்நடவடிக்கை எடுக்கவேண்டும்என்றும் கோரிக்கை விடுத்தனர். (ச-17)

## யாழில்

### 15 நாள்களில் 270 பேருக்கு டெங்கு

இந்த ஆண்டின் கடந்த 15 நாள்களில் மட்டும் யாழ்.மாநகர பிரதேசத்தில் 270 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். யாழ்.குடாநாட்டில் டெங்கின் தாக்கம் தற்போது அதிகரித்து வரும் நிலையில் அதனை முழுவீச்சில் கட்டுப்படுத்தும் நடவடிக்கையும் முடுக்கி விடப்பட்டுள்ளது. (ச-17)

### 101 இடங்களில் நுளம்புக் குடம்பிகள்!

யாழ். மாநகர பிரதேசத்தில் 101 இடங்களில் நுளம்புக் குடம்பிகள் அவதானிக்கப்பட்ட நிலையில் உரிமையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். கடந்த 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் இந்த விசேட டெங்கு ஒழிப்பு களத்தரிசிப்பு முன்னெடுக்கப்பட்டது. (ச-17)

### நாளை

20.01.2024
சனிக்கிழமை
தை 06

சுபநேரம் : 03.35 - 05.05
ராகுகாலம் : 09.35 - 11.05

### நாளொரு நல்வார்த்தை

ஓர் அரசாங்கத்தின் சீரழிவு எப்போதுமே அதன் கொள்கைகளின் சிதைவால் தொடங்குகிறது.

- மான்டெஸ்கியூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு. ராஜ் ராஜரட்ணம் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "UNEVEN JUSTICE" என்ற நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு :

# சமனற்ற நீதி

## நூல் வெளியீடு

**ராஜ் ராஜரட்ணம்,** 1957 இல் இலங்கையில் பிறந்தார். இவருடைய தந்தையார் ராஜரட்ணம் அவர்கள் உலகப் புகழ் பெற்ற சிங்கர் நிறுவனத்தில் உயர்நிலை அதிகாரியாகக் கடமையாற்றியவர். இவரின் பூர்வீகம், யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பகுதியிலுள்ள "அல்வாய்" கிராமம் ஆகும்.


ராஜ் ராஜரட்ணம் அவர்கள் ஆரம்பக் கல்வியை இலங்கையிலும் இந்தியாவிலும் கற்றார். உயர்கல்வியை இங்கிலாந்தில் மேற்கொண்டு, சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டதாரியானார். அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தில் எம்.பி.ஏ பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். சேஸ் மேன்ஹாட்டன் வங்கியில் நிதிப் பகுப்பாய்வாளராகத் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார். 1997 ஜனவரியில், தனது சொந்த நிறுவனமான உலகப்புகழ்பெற்ற "கலியன்" முதலீட்டு நிதியத்தை நிறுவினார். 2009 இல், அமெரிக்கப் புலனாய்வுப் பணியகம் ராஜ் ராஜரட்ணத்தை அதிரடியாகக் கைது செய்தது. அமெரிக்க அரசு அவர் மீது ஒருதொகை "உட்தகவல்" வணிகக் குற்றங்களைச் சுமத்தியது. குற்றங்களை ஒப்புக்கொள்ளுமாறு அரசுத் தரப்பு பல்வேறு அழுத்தங்களையும் நெருக்கடிகளையும் அவர்மீது பிரயோகித்தது. தன்மீது சுமத்தப்பட்டவை பொய்க் குற்றச்சாட்டுக்கள் என்பதில் உறுதியாக நின்ற ராஜ் ராஜரட்ணம் இறுதிவரை அமெரிக்க அரசுக்கு எதிராகச் சட்டப் போராட்டத்தை நடத்தினார். நீதிமன்றம் தனக்கு நீதி வழங்கும் என நம்பினார். ஆனால், அமெரிக்க நீதித்துறையிலுள்ள பேராசை பிடித்த சில தனிநபர்களின் சதிகளாலும் பொய்ச் சாட்சிகளாலும் அவர் வஞ்சிக்கப்பட்டார். அவருக்குப் பதினொரு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இலங்கையில் ராஜ் ராஜரட்ணத்தின் குழந்தைப் பருவம் முதல் அவரது ஐம்பத்துநான்காவது வயதில் அமெரிக்கச் சிறையில் அடைக்கப்பட்டது வரையான வரலாற்றை விவரிக்கும் நூலை அவர் சிறையில் இருந்தபோது எழுதினார். இந்நூல் Uneven Justice என்ற தலைப்போடு 2021 இல் ஆங்கிலத்தில் வெளியாகி மிகுந்த கவனத்தைப் பெற்றது. அந்நூல் இப்போது தமிழில் வெளியாகிறது.

அமெரிக்க நீதித்துறையிலுள்ள ஊழல்களையும் குறைபாடுகளையும் உள்ளது உள்ளபடியே தைரியமாகச் சொல்லும் இந் நூலிலுள்ள ஒவ்வொரு எழுத்திலும் அநீதியாகத் தண்டிக்கப்பட்ட ஒரு மனிதனின் நீதி கோரிய குரல் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

**சமனற்ற நீதி : மாணவர்கள், இளைஞர்களிடையே எந்தவொரு விடயத்தையும் அச்சமின்றி எதிர்கொள்ளக்கூடிய தன்னம்பிக்கையையும், உந்துதலையும் வழங்குகிறது. இந்நூல் நிதி, நிர்வாகம், சட்டம் மற்றும் வணிகத்துறையில் உள்ளவர்கள் சவால்களை எதிர்கொள்ளும்போது தங்களுடைய பாதையை நேர்வழியில் அமைத்துக்கொள்ள வழிகாட்டியாகவும் அமைகிறது.**

**இந்நூல் வெளியீட்டு நிகழ்வில்**
**திரு. ராஜ் ராஜரட்ணம் அவர்கள் நேரடியாகக் கலந்துகொண்டு**
**ஆற்றவுள்ள சிறப்புரையானது**
**பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.**




**காலம் : 20.01.2024 சனிக்கிழமை**
**நேரம் : பி.ப 2.45 மணி**
**இடம் : ஹூவர் கலையரங்கம், மருத்துவப் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

இந்நிகழ்வை நேரலையாக
ஐ.பி.சி தொலைக்காட்சி ஊடாகவும்
ஐ.பி.சி வலையொளியூடாகவும்
சமனற்ற நீதி என்ற முகநூல் வழியாகவும்
பார்வையிட முடியும்.

அனுசரணை

The Jaffna Teaching Hospital Foundation

synamon global

**● Live Streming** IBC தமிழ் TV & Youtube
சமனற்ற நீதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுக்குடியிருப்புப் பிரதேசசபைக்கு எதிராக வர்த்தகர்கள் போராட்டம்!

முல்லைத்தீவு, ஜன.19

புதுக்குடியிருப்புப் பிரதேசசபையின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று புதுக்குடியிருப்புப் பிரதேசசபை வாயிலில் போராட்டம் முன்னெடுக்கப் படும் என்று புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

"புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் கழிவகற்றல் மிகக் குறைவாகவே உள்ளது. வடிகால்கள் சீர் செய்யப்படவில்லை. புதுக்குடியிருப்பு நகர் முழுவதும் கால் நடைகள் காணப்படுகின்றன. இது தொடர்பாக பலமுறை கடிதம் மூலம் தெரிவித்தும் பிரதேசச்பை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

புதுக்குடியிருப்புசந்தைப்பகுதியில்மூன்றுபுடைவை வியாபாரிகளின் தகரக் கொட்டகை, கட்டடம் கட்டித் தரப்படும் என்று தெரிவிக்கப்பட்டு அகற்றப்பட்டது. 18 மாதம் கழித்து பிரதேசசபையினர் இருபது வருடங்களுக்கான வாடகையாக ஒரு மாதம் 7 ஆயிரம் ரூபா வீதம் மொத்தமாகத் தந்தால் கடை தருவோம் என்று கூறியுள்ளனர். அவர்கள் நடத்துவது சாதாரண சிறிய கடை என்பதால் இது தொடர்பாக மீள் பரிசீலனை செய்யுமாறு கேட்டிருந்தோம். அதற்குப் பதில் தராமல் கடைகளை 19ஆம் திகதி ஏலம் விடுகின்றார்கள் என்று ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொண்டோம்.

இது தொடர்பாகக் கடை உரிமையாளர்களுக்கும் தெரியப்படுத்தப்படவில்லை. இதனால் வணிகர் கழகங்கள் இணைந்து அவற்றின் கீழ் இயங்கும் 384 கடைகளும் மூடப்பட்டு பணியாளர்கள் அனைவரும் பிரதேசசபையின் வாசலை அடைத்துப் போராட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளோம்.

எமது போராட்டத்துக்கு கிராம மக்கள், வர்த்தகர்கள், பணியாளர்கள், அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும்" என்று கேட்டுக்கொள்கின்றோம் எனப் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கத் தலைவர் த.நவநீதன் தெரிவித்துள்ளார். (எ-19)

# வெள்ளிவிழா விளையாட்டுப் போட்டிகள்

சாவகச்சேரி, ஜன.19

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு சங்க அங்கத்தவர்களுக்கான விளையாட்டுப்போட்டிகள் சாவகச்சேரி, டச்சு வீதி செருக்கல் பிள்ளையார் கோவில் முன்றிலிலும் அருகில் உள்ள சாவகச்சேரி நகர் பொது நோக்கு மண்டபத்திலும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் தமிழர் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் என்றும், போட்டிகளில் வெற்றியீட்டும் மாதர்களுக்கு சர்வதேச மகளிர் தின விழாவில் பரிசில்கள் வழங்கப்படும் எனவும் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ரி-9)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலிகள்

தோற்றம்
09.04.1939

மறைவு
30.12.2022



தோற்றம்
06.03.1942

மறைவு
29.01.2023

அமரர்
**சின்னக்குட்டி தருமலிங்கம்**
திதி: அட்டமி (20.12.2023)

அமரர்
**தருமலிங்கம் இராஜேஸ்வரி**
திதி: நவமி (19.01.2024)

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகங்கள் எந்நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்து நீங்கள் விண்நோக்கி சென்றாலும்
கண்விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

நிரந்த முகவரி:
நகுலேஸ்வரா வீதி, கீரிமலை,
தற்காலிக முகவரி:
79 /6, மானிப்பாய் வீதி, சுன்னாகம், மருதனார்மடம்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs.27676) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம்
31 • 07 • 1945



மறைவு
16 • 01 • 2024

### சொர்ணாம்பிகை பரமேஸ்வரன்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சொர்ணாம்பிகை பரமேஸ்வரன் கடந்த 16.01.2024 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசகுலசூரியர் சிவபாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், பரமேஸ்வரன் அவர்களின் அன்பு மனைவியும், நாகலோஜினி, சசிகலா ஆகியோரின் அன்புத்தாயாரும், பிரபாகரன், சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், அனுஸ், ஹனீஸ், ஹர்சிகா, ஹேசிகா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், காலஞ்சென்ற சிங்கமாப்பாணர் மற்றும் சர்வாம்பிகை ஆகியோரின் சகோதரியும் விஸ்வநாதன், திலகவதி, ஜானகி, காலஞ்சென்ற ஞானாம்பிகை மற்றும் கந்தசாமி, சண்முகரட்னம், நவநீதமணி, சண்முகதாசன் ஆகியோரின் மைத்துனியும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பூதவராயர் கோவிலடி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(cs.53581) (n.1)

தகவல்:
குடும்பத்தினர்

## 35 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
22 • 04 • 1946



இறப்பு
16 • 12 • 2023

### கந்தசாமி சாந்தகுணராசா

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (19.01.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலடி வீதி,
ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

(cs.53579) (N-1)

குடும்பத்தினர்
021 224 1009

## மரண அறிவித்தல்

### தம்பையா பரம்சோதிநாதன்



மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும், கைதடி நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா பரம்சோதிநாதன் அவர்கள் நேற்று (18.01.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தம்பையா கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும், சிவசோதி (அமரர் லண்டன்), செல்வராணி (அமரர் கனடா), மங்களம் (சுவிஸ்), சோமநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஶ்ரீதரன் (நெதர்லாந்து), ரவீந்திரன், நிதர்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், யசோதரன் (அமரர் பிரான்ஸ்), கேனீதரன் (மட்டுவில் கிழக்கு), ரமேஸ்வரன் (மலேசியா), தாருணி (மானி கைதடி, நுணாவில்), தர்சிகா (திருநெல்வேலி), ஸவீணா (திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், தவநிதி, பிரியந்தி, பகீரதன் (இ.போ.ச. சாரதி, கொழும்பு), தவறூபன், ஆதவன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிஷாந்தன், ரம்மியா, றினுஷா, நிலுக்ஷா, நிபிஷா, ரவின்சா, கவின்சன், அக்சரா, அபிதேஸ், கியாரா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27704) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

14 EDITION

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
# JAFFNA INTERNATIONAL TRADE FAIR

JITF 2024

**JANUARY 19 20 21 ஜனவரி**

10.00மு.ப - 8.00பி.ப

Muttraweli Grounds (Next to Jaffna Fort) முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)

# இன்று ஆரம்பம்



## Message from
## Managing Director
### Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd

It is with immense pleasure and gratitude that I extend my heartfelt appreciation to everyone who played a pivotal role in making the 14th Jaffna Multi Trade Fair a reality.

As the driving force behind this significant event, Lanka Exhibition & Conferences Services (Pvt) Ltd, is optimistic about the transformative impact that events of such magnitude can have on the economic development of the North.

Our gratitude goes to our sponsors, for your support which was instrumental in bringing this event to fruition, we also thank you for your commitment to the growth and development to the northern community. Your partnership has been a cornerstone in our collective effort to create a positive impact on the economic landscape of Jaffna.

The 13th Jaffna Multi Trade Fair marked a historic milestone as the largest multi-trade exhibition in the north, drawing a massive crowd in 2023, with an overwhelming response, of approximately +60,000 visitors. This reflects the growing vibrancy of the Northern Province.

The Jaffna International Trade Fair (JITF) has made remarkable progress since its establishment during a the ceasefire period in 2002. From its beginnings in a Jaffna school, JITF evolved moving to Duraiappa Stadium. The Stadium benefited from the infrastructure provided by LECS.

JITF not only facilitates interaction within the local business community but also opens doors for engagement with potential investors and entrepreneurs, fostering a climate of growth and innovation. As such JITF is recognized as the 'Gateway to the North.'

The event has become an annual gateway for companies into Jaffna, boosting the local economy by filling hotels and restaurants to capacity and fostering economic growth and opportunities. Sri Lanka's tourism industry saw notable improvements, such as growth rates increasing by 46 percent in 2010, 30 percent in 2011, 17 percent in 2012, and 18 percent in 2013. However, the sudden surge in tourist arrivals led to challenges in meeting the increased demand, especially in post-war cities. Significant road development initiatives, including the construction of the primary route, the A9, and other crucial routes linking Kankesanthurai, Palaly, and Point Pedro, have contributed to the region's progress. The restoration of old homes and temples, along with the establishment of small enterprises after the pandemic, reflects the resilience and determination of the local community. Compared to previous years, there has been a prominent increase in tourist arrivals into Sri Lanka this year, with 101,362 tourists arriving in the first two weeks of January 2024 alone.

Historically reliant on agriculture and fishing, the Northern province is witnessing the gradual recovery of both sectors. To address the unique needs of the fishing industry, Sri Lanka is creating a specialized investment zone in the Northern province.

I would like to seize this opportunity to express my sincere gratitude to all government officials and organizations whose collaboration made this event possible. Special thanks to the Chamber of Commerce & Industries of Yarlpanam, all sponsors, exhibitors, and participants for their steadfast support. Your commitment to excellence and quality is truly inspiring.

Let us collectively pave the way for important collaborations and projects that will lead Jaffna to prosperity in the future. Thank you once again for gracing us with your presence and for your unwavering commitment to the advancement of Jaffna.

Let us collectively pave the way for important collaborations and projects that will lead Jaffna to prosperity in the future. Thank you once again for gracing us with your presence and for your unwavering commitment to the advancement of Jaffna.ffna International Trade Fair (JITF). We at Lanka Exhibition & Conferences Services (Pvt) Ltd, as the organizer of this mega event are confident that exhibitions of this nature will create a gateway to facilitate trade in the north for the business community in Sri Lanka to meet the potential entrepreneurs and investors.

As per the statistics there is a significant increase of the visitors to the exhibition year on year which clearly indicates that the northern population has increased as a result of the environment being conducive for people to live with the rapid development of infrastructure in the north and east streamlining the living conditions of the northern community.

I take this opportunity to thank all government personnel and organizations who have been very supportive towards making this event a reality.

I also wish to express my sincere thanks for the continuous support of this trade exhibition to the Ministry of Industry & Commerce, the Chamber of Commerce & Industries of Yarlpanam, the Export Development Board and all Exhibitors, Sponsors & participants.

I also thank the people of Jaffna for their continued support in making JITF a great success year after year.

Arjun Dharmadasa



## Message from
## Chief Executive Officer
### Lanka Exhibition & Conference Services (Pvt) Ltd

The Northern most tip of the country, its capital will be set alight for the 14th consecutive year with the commencement of the Jaffna International Trade Fair (JITF) 2024 from the 19th to 21st of January.

The Exhibition which has risen to a 'must attend' event by the citizens, businessmen, traders and entrepreneurs of the North will be held at the Muttraweli Grounds Jaffna, at the heart of the peninsula.

The trade fair which comprises all types of industry stalls, caters to a diverse variety of needs and services and has been considered the single most focal point for a wide spectrum of businesses, investors and citizens.

Organizing the 14th edition of JITF ensures that the northern region is still one of Sri Lanka's prime untapped markets in terms of trade and investment. This event undoubtedly is considered the most focused exhibition and Trade Fair in Jaffna.

I take this opportunity to welcome all exhibitors, delegates and visitors to Jaffna while thanking and wishing all our valued sponsors and exhibitors the very best at JITF.

I also wish to convey my sincere thanks and gratitude to all stakeholders who have supported us immensely in making this year's JITF a success.

Aasim Mukthar



## Message from
## Chairperson of JITF 2024
## Executive Director
### Chamber of Commerce and Industries of Yarlpanam.

The Northern most tip of the country, its capital will be set alight for the 14th consecutive year with the commencement of the Jaffna International Trade Fair (JITF) 2024 from the 19th to 21st of January.

The Exhibition which has risen to a 'must attend' event by the citizens, businessmen, traders and entrepreneurs of the North will be held at the Muttraweli Grounds Jaffna, at the heart of the peninsula.

The trade fair which comprises all types of industry stalls, caters to a diverse variety of needs and services and has been considered the single most focal point for a wide spectrum of businesses, investors and citizens.

Organizing the 14th edition of JITF ensures that the northern region is still one of Sri Lanka's prime untapped markets in terms of trade and investment. This event undoubtedly is considered the most focused exhibition and Trade Fair in Jaffna.

I take this opportunity to welcome all exhibitors, delegates and visitors to Jaffna while thanking and wishing all our valued sponsors and exhibitors the very best at JITF.

I also wish to convey my sincere thanks and gratitude to all stakeholders who have supported us immensely in making this year's JITF a success.

Dr.V.K.Vignesh PhD.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE LARGEST MULTITRADE EXHIBITION IN THE NORTH

14th EDITION

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
# JAFFNA INTERNATIONAL TRADE FAIR

JITF 2024

JANUARY 19 20 21 ஜனவரி

10.00மு.ப - 8.00பி.ப

Muttraweli Grounds (Next to Jaffna Fort)
முற்றவெளி மைதானம் (யாழ் கோட்டைக்கு அருகில்)

## இன்று ஆரம்பம்



### Message from
### Group Managing Director / CEO
### DIMO

It is with great enthusiasm that DIMO embraces its role as the Platinum Sponsor for the 14th Jaffna International Trade Fair (JITF).

Since its inception, we have proudly supported JITF, recognizing its pivotal role in fostering regional economic growth. This platform fuels entrepreneurship, forges new alliances, and creates opportunities that elevate the quality of life for all Sri Lankans.

Our commitment to JITF 2024 seamlessly aligns with our corporate purpose of fuelling dreams and aspirations of the communities. By spearheading this initiative, we actively contribute to facilitating economic activities and bringing the latest technologies and solutions to the doorstep of our stakeholders.

We wish the JITF 2024 continued success in shaping a brighter future.

Gahanath Pandithage



### Message from
### The Director
### Adrian Solar Green (Pvt) Ltd

**Adrian Solar Green (Pvt) Ltd** is a proud Gold Sponsor and featured exhibitor of solar energy generators at the upcoming Jaffna International Trade Fair 2024.

As the Director of Adrian Solar Green, I am excited to showcase our cutting-edge solar solutions at this significant event, aligning with our commitment to sustainable energy. The trade fair is a vital platform for collaboration and progress, and our participation as a Gold Sponsor reflects our dedication to economic growth, technological advancement, and environmental stewardship.

Visit our stalls to witness the latest in solar energy technology, exemplifying efficiency, reliability, and environmental responsibility. Our experts will be on hand to discuss how our solutions contribute to a cleaner and more sustainable energy landscape.

Join us at the Jaffna International Trade Fair 2024 as we shape the future of renewable energy together. Additionally, I would like to thank Lanka Exhibition & Conference Services (Pvt.) Ltd for organizing such exhibition which bring mutual benefits for entrepreneurs and clients.

D. Anton



### Message from
### General Manager Group Marketing
### Tokyo Cement Company (Lanka) PLC

TOKYO CEMENT GROUP is honored to be the Gold Sponsor of The Jaffna International Trade Fair (JITF) 2024. This is the second consecutive year of our sponsorship of this grand event which is a unique platform to engage with our customers in the Northern Peninsula.

Our participation in the JITF over the past several years opened many avenues for us to get closer to our customers and dealer partners in the region. Getting engaged in such a large-scale gathering of customers at a single venue provides a great advantage for all businesses to maximize their promotional expenditure in today's economic climate.

This Trade Fair is a great place for customers to learn about the country's widest range of construction solutions that include cement, concrete, and cement-based value-added products, brought to them by the TOKYO CEMENT GROUP. At this year's event, as the Leading Partner in Nation-building, Tokyo Cement is also showcasing several new products and solutions that are revolutionizing the construction materials market. We invite all visitors to the JITF to come visit our stall to witness the total offering of Tokyo Cement.

As I congratulate the organizers for arranging this event on such a grand scale, I am confident that this year's Jaffna International Trade Fair will be a definite success for all participants.

Dashantha Udawatte

JITF 2024

PLATINUM SPONSOR — DIMO THE PERFECT PARTNER

GOLD SPONSORS — ADRIAN SOLAR GREEN, NIPPON CEMENT

ORGANIZED BY — LECS

IN ASSOCIATION WITH

OFFICIAL SPONSORS — PRINT MEDIA, RADIO, TELEVISION, CITY HOTEL

SILVER SPONSORS — Anchor, SOORYA, Hayleys Solar, Darley Butler, Elephant House, KEELLS KREST, PHOENIX, RHINO, Sera

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Solar System

# சோலர் பற்றிய போலி பிரச்சாரங்களில் ஏமாறாதீர்கள்

MICRO PC SYSTEMS

அதிகூடிய விலையில் சோலர் சிஸ்டத்தை வாங்கும் முன் சந்தை விலையை தெரிந்து கொள்ளுங்கள்

28 வருட கால அனுபவம் உள்ள நிறுவனம்.

| 2 KW | 5 KW | 10 KW | 20 KW | 30 KW | 40 KW |
|---|---|---|---|---|---|
| Rs.540,000 | Rs.975,000 | Rs.1,750,000 | Rs.2,680,000 | Rs.4,015,000 | Rs.5,250,000 |
| 240 unit | 600 unit | 1200 unit | 2400 unit | 3600 unit | 4800 unit |

## 25 years warranty

Fronius
HUAWEI
solis
FOX ESS
SOLAX POWER
ENVERTECH A Green Future Is In Our Hands!
JinKO Solar
JA SOLAR
ZNSHINESOLAR
ulica solar LEADING IN TECHNOLOGY
risen solar technology
YINGLI SOLAR
DMEGC
MiPAQ
victron energy BLUE POWER
AQUASTRONG

மேலதிக விலைக்கழிவுகளுக்கு அழையுங்கள்.

**Jaffna :0773963280/0777425973/0773963284/0711039536**
**Kilinochchi : 0706098482/0773963284**
**Vavuniya : 0773963278/0773963280/07777425973**
**Batticaloa : 0710356072/0710356069**
**Colombo: 0706645125/0773013043/0713963281**

No.281, Hospital Road, Jaffna.
A9 Road, Kilinochchi.
No 27A, U.C Qurters, Kurumankadu, Vavuniya.
No.155-5C, New Kalmunai Road, Kallady, Batticaloa.
No.115, W.A.Silva M.W Colombo - 6.
No.11, Gemanu Mw, Borupane Road, Ratmalana.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் பஸ்சேவை கோரும் பொன்நகர் கிராம மக்கள்

கிளிநொச்சி, ஜன.19

**கிளிநொச்சி - பொன்நகர் மக்கள் நீண்டதூரம் நடந்து வந்தே பஸ்களில் பயணிக்கவேண்டிய நிலைமை காணப்படுகின்றது என்றும் உள்ளூர் பஸ் சேவைகளை ஆரம்பிக்க வேண்டும் என்றும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

பாரதிபுரம், மலையாளபுரம், பொன்நகர் போன்ற கிராமங்களுக்கு உள்ளூர் பஸ் சேவைகள் நடத்தப்படவேண்டும் என்று நீண்டகாலமாகக் கோரிக்கை விடுக்கப்பட்டுவருகின்றது. ஆயினும் இதுவரை உள்ளூர் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

உள்ளூர் பஸ் சேவைகள் இல்லாததால் நீண்டதூரம் நடந்துவந்து ஏ-9 வீதியில் பயணிக்கும் பஸ்களிலேயே பயணிக்க வேண்டியுள்ளது. உதயநகர், பாரதிபுரம், மலையாளபுரம், பொன்நகர், திருமுறிகண்டி ஆகிய கிராமங்களில் உள்ள குடும்பங்களின் போக்குவரத்து நலன் கருதி உள்ளூர் பேருந்து சேவைகள் நடத்தவேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த பஸ் சேவை நடத்தப்பட்டால் அறிவியல் நகரில் உள்ள மாணவர்களுக்கும் போக்குவரத்து இலகுவாக்கப்படும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.


(எ-ரி-13)

## மரண அறிவித்தல்

### திரு அன்ரனி துரைரெட்ணம் (எட்மன்)

தோற்றம்
04.08.1983

மறைவு
17.01.2024



திரு அன்ரனி துரைரெட்ணம் எட்மன் புதன்கிழமை 17.01.2024 அன்று காலமானார். திரு. திருமதி அன்ரனி துரைரெட்ணம் லில்லி மேரிஆன் என்பவர்களின் அன்பு மகனும் திருமதி கிறிஸ்மினா சுதர்சினி அவர்களின் அன்பு கணவரும், சபியோன், செரபியோன் ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு. திருமதி பத்திநாதர் பொன்மலர் என்பவர்களின் மருமகனும் திரு. அஞ்சலோ செல்வராஜா (பிரான்ஸ்), திரு. பற்றிக் (பிரான்ஸ்), திருமதி மரீனா (மாலினி) ஜெரால்ட் திலகேந்திரா (ஆசிரியர்யா/கனகரத்தினம் ம. ம. வித்தி).திரு.விஜயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூவுடல் இன்று (19.01.2024) வெள்ளிக்கிழமை புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி மாலை 4.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேந்தி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 27703) S-1

தகவல்:
077 974 2073
குடும்பத்தினர்.

## இடமாற்றம்

சாவகச்சேரி, ஜன.19

சாவகச்சேரி நகரசபையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றிய பி.தளிர்ராஜ் பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

எழுதுமட்டுவாழ் பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகராகக் கடமையாற்றும் சூ.குணசாந்தன் சாவகச்சேரி நகரசபைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் வருடாந்த இடமாற்றலின் அடிப்படையில் மாகாண சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகங்களில் கடமையாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றல் வழங்கப்படுகின்றது.

அதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தற்போது டெங்குத் தொற்று அதிகமாகவுள்ள நிலையில் இடமாற்றல் வழங்கப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் புதிய நிலையங்களில் கடமையேற்பது தாமதிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-9)

## மதுவரித் திணைக்களத்தின் சுற்றிவளைப்புகளால் 82 லட்சம் ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மதுவரித் திணைக்களத்தால் கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புகளில் சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பில் 82 இலட்சத்து 74 ஆயிரத்து 320 ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் மது உற்பத்தி மற்றும் விற்பனை, புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் சட்டவிரோத முறையில் புகைத்தல், பொருள் இருப்பும் மற்றும் விற்பனை உட்படப் பல குற்றங்கள் தொடர்பாகவே இந்தத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண உதவி மதுவரி ஆணையாளர் பிரிவு ஒன்றின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் செயற்படுகின்ற சாவகச்சேரி, சங்கானை, மல்லாகம், பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய மதுவரி நிலையங்கள் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே இந்தத் தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது. (எ-125)

## சீரமைக்கப்பட்ட வீதிகள் குறுகிய காலத்தில் சேதம்

### துணுக்காய் மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் சீரமைக்கப்பட்ட வீதிகள் தற்போது மீண்டும் சேதமடைந்துள்ளன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் நீண்ட காலமாகச் சீரமைக்கப்படாதிருந்த வீதிகள் சீரமைக்கப்பட்டன. ஆயினும் சீரமைக்கப்பட்ட வீதிகள் குறுகிய காலத்திலேயே சேதமடைய ஆரம்பித்துள்ளன.

அதேவேளை, வீதிச் சீரமைப்புக்காகக் குவிக்கப்பட்ட கிரவல்கள் பல இடங்களில் காணப்படுகின்றபோதும் 5 ஆண்டுகளுக்கு மேலாக வீதிச் சீரமைப்பு நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (ரி-13)

## மரண அறிவித்தல்



### மாகிறேற் யோசேப்பு (சின்னம்மா)

யாழ்ப்பாணம் கச்சேரியடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட 'சின்னம்மா' என்று அன்பாக அழைக்கப்படும் மாகிறேற் யோசேப்பு அவர்கள் நேற்று (18.01.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு, முத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கிறிஸ்ரோப்பிள்ளை யோசேப்பு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஞானம்மா, செல்வராணி, யோசேப்பு செல்வநாயகம் (ஆசீர் வணிக நிலையம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சாந்தி, ஆனந்தி, சுகந்தி (பிரான்ஸ்), சுமதி மற்றும் காலஞ்சென்ற அருந்ததி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற லூயிஸ் மரியநாயகம், பற்றிக் யூட் மனோராஜ், அமலதாசன் (பிரான்ஸ்), றொபின்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷலோமிதா, பிறேமிதா, ஸ்ரெபனி, பவியான், பவியோலா, சோபிதா ஆகியோரின் அன்புப் பேரத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (19.01.2024) வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணியளவில் புனித திரேசாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நிக்சன்.

(CS 27699) A-1

## ஒழுங்கைகளில் கழிவுகளை வீசிச் செல்லும் விஷமிகள்

சாவகச்சேரி, ஜன.19

சாவகச்சேரி நகரப் பகுதியில் உள்ள ஒழுங்கைகளில் பெருமளவு பிளாஸ்ரிக் போத்தல்களும், பாவனைக்கு உதவாத பொருள்களும் இனந்தெரியாதோரால் வீசப்பட்டு வருகின்றன. இதனால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நகரின் பிரதான வீதிகளில் நகரசபையினர் தினமும் கழிவுகளை அகற்றிவரும் நிலையில் ஒழுங்கைகளில் இனந்தெரியாதோர் கழிவுகளை வீசுகின்றனர். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ரி-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பரமனே நமஹ

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





அன்னை மடியில்
18.08.1985

ஆண்டவன் மடியில்
29.01.2023

## சண்முகலிங்கம்
## பிரதாப்

(வதனி ஜுவலறி - கொடிகாமம்)

அன்பின் ஒளியாகவும் பண்பின் நண்பனாகவும்
- இருந்து
நட்போடு பழகி உன் கைவண்ணத்தால் வென்றவரே!
உறவுதான் உயிர்மூச்சென்று இருந்தீரே
காலனுக்குப் பொறுக்கவில்லையா ?
- ஏன் இந்த அவசரம்?
தினமும் வாசற்படி பார்க்குதையா எம் கண்கள்
எம்மோடு இருந்த ஒவ்வொரு கணமும்
உயிர் உள்ள வரையில் எம்மால் மறக்கமுடியுமா?
இறைவனுக்கும் ஏன் இந்த அவசரம்?
உன்னை வெகுவிரைவில் அழைத்ததும் ஏனோ,

**என்றும் உங்களின் நினைவுகளுடன் வாழும்**

**குடும்பத்தினர்**

பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி .
(077 800 2724

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாநாடு

யாழ்ப்பாணம், ஜன. 19

வட அமெரிக்கத் தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் yarl it hub மற்றும் யாழ்.பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் FiTEN Yarl 2024 மாநாடு இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெறவுள்ளது.

வளர்ந்து வரும் தொழில் முனைவோரை வலுப்படுத்தல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களை வளர்த்தல் எனும் தொனிப்பொருளில் இந்த மாநாடு நடத்தப்படவுள்ளது. (ம-66)

## பொங்கல் விழா!

கொடிகாமம், ஜன. 19

கொடிகாமம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கமும், சிறுவர் கழகமும் இணைந்து நடத்தும் பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடிகாமம் ஐயனார் ஆலய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு பிரத்தியேக உதவியாளர் எந்திரி சாந்தாதேவி தருமரத்தினம், கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ரணசிங்க ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-159)

## யுக்திய 'ஒப்பரேஷன்' குற்றங்கள் குறைவு!

யுக்திய ஒப்பரேஷனால் நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்கள் 17 வீதத்தால் குறைவடை ந்துள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

'யுக்திய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் (நேற்றுமுன்தினம்) ஒரு மாதம் பூர்த்தியாகியுள்ளது. அந்தவகையில் கடந்த மாதம் நாட்டில் இடம்பெறும் அனைத்துக் குற்றச்செயல்களும் 17 வீதத்தால் குறைவடைந்துள்ளன.

யுக்திய நடவடிக்கை என்பது ஊடகக் கண்காட்சி நடவடிக்கை அல்ல. போதைப்பொருள் பணத்தில் வாழும் சிலரே அவ்வாறான கருத்துகளை பரப்புகின்றனர். யுக்திய நடவடிக்கை வெற்றியளித்துள்ளது. மக்கள் அதனை நம்புகின்றனர்' - என்றார். (அ-ம-44)

## நகைகள் திருட்டு: இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜன. 19

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுவில் மல்வம் பகுதியில் வீடுடைத்துத் திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் உடுவில் மல்வம் பகுதியில் வீடொன்று உடைக்கப்பட்டு பெருமளவான நகைகள் திருடப்பட்டிருந்தன. இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டிருந்தது. முறைப்பாட்டுக்கமைய மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் 20 வயதுடைய இளைஞர் ஒருவரை சந்தேகநபராக நேற்றுக் கைதுசெய்தனர். திருடப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் நகைகளும் அவரிடமிருந்து மீட்கப்பட்டன. (அ-ம-27)

## இருவர் காயம்

ஊரெழு பர்வதவர்த்தனி மனோன்மணி அம்மன் ஆலயத்துக்கு அருகில் நேற்றுமுன்தினம் நடந்த விபத்தில் இளம்பெண் ஒருவரும், முதியவர் ஒருவரும் காயமடைந்துள்ளனர். இவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பலாலி வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணித்த முதியவரை, அதேவீதியில் இளம் பெண் பயணித்த மோட்டார் சைக்கிள் பின்புறமாக மோதி விபத்துக்குள்ளாகியது என்று கூறப்படுகின்றது. (எ-66)

## எழுத்தாளர் ராணிசீதரனின் சிறுகதை நூல் அறிமுகம்

எழுத்தாளர் ராணி சீதரனின் 'கடவுள்தான் அனுப்பினாரா' சிறுகதை நூல் அறிமுக நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு திருகோணமலை நகராட்சிமன்ற பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

திருகோணமலை 'அன்பின் பாதையின் எண்ணம்போல் வாழ்க்கை' கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கலை இலக்கிய ஆர்வலர்களை பங்கேற்குமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ச)

## இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்!

மன்னார், ஜன. 19

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டுக்காக கைதுசெய்யப்பட்ட 18 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மன்னார் தாழ்வுபாடு கடற்பரப்புக்கு அருகாகவைத்து மேற்படி 18 மீனவர்களும் கடந்த 16ஆம் திகதி கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் தாழ்வுபாடு கடற்கரை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். இதன்போதே அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 31ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (அ-ம-213)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமல் தரப்புடன் விரைவில் பேச்சு
## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 19

எமது அரசியல் எதிரியாகக் கருதப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவுடனேயே நாட்டு நலன் கருதி இணைந்து செயற்பட முடியுமெனில், விமல் தரப்பினருடன் ஏன் செயற்படமுடியாது? அவர்களுடனும் நிச்சயம் பேச்சு நடத்தப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்தாமல்கூட இருக்கலாம் என மஹிந்த ராஜபக்ச தெரிவித்த விடயம் மற்றும் விமல் அணிக்கு அழைப்பு விடுக்கப்படுமா என்பன தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே நாமல் ராஜபக்ச இவ்வாறு கூறினார். பொதுஜன பெரமுனவில் அதிகளவு வேட்பாளர்கள் உள்ளனர். அதனால்தான் அவர் (மஹிந்த ராஜபக்ச) அவ்வாறு தெரிவித்திருக்கக்கூடும். பொருத்தமான நபரை நிச்சயம் நாம் தெரிவுசெய்வோம் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-44)

# இயற்கை விவசாய பயிற்சிப்பட்டறை

யாழ்ப்பாணம், ஜன. 19

வடமராட்சி அபிவிருத்தி நிறுவகம் சார்பில் முன்னெடுக்கப்படும் இயற்கை விவசாயம் தொடர்பான பயிற்சிப் பட்டறை கரவெட்டி பிரதேசசபை மண்டபத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப்பட்டறையில் தமிழ்நாடு இயற்கை வேளாண்மை விஞ்ஞானி பாமயன், இயற்கை வேளாண்மை பண்ணை ஆலோசகர் ராஜகணேஸ் ஆகியோர் கலந்துகொண்டு இயற்கை விவசாயம் தொடர்பான பயிற்சிகளையும், ஆலோசனைகளையும் வழங்கவுள்ளனர். பயிற்சிப்பட்டறையில் இயற்கை விவசாயத்தில் ஆர்வமுள்ளவர்களை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ரி-100)

**காணி விற்பனைக்கு**

யாழ். பிறவுண் வீதியில்,
4 பரப்புக் காணியும், 5 பரப்புக் காணியும்,
6 பரப்புக் காணியும்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 723 2535

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 11 இடுகாட்டு வீதி. 67/1.என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எம்.மரியம்மா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். வண்ணார் பண்ணை வடமேற்கு இறை. 19.07.2019ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சோ. தேவராஜா முகதாவில் 8640ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட பிரகடனப்படுத்தல் சாதனம் மூலம் வெஞ்சஸ்லாஸ் வின்சன் விமலதாஸ் கைம்பெண் மேரிசர்மிளா குறித்த ஆதனத்திற்கு தானே உரிமையாளர் என பிரகடனப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனம் 22.07.2019ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சோ.தேவராஜா முகதாவில் 8642ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் வெஞ்சஸ்லாஸ் வின்சன் விமலதாஸ் கைம்பெண் மேரிசர்மிளா என்பவர் இரத்தினம் அமலசேகர் பெண் மேரிகேட்டி என்பவருக்கு அறுதியாக வழுங் கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை யாழ்ப்பாண பிரதேசசெயலக பிரிவு யாழ்ப்பாண மாநகரசபை. J/485 நாவாந்துறை வடக்கு கிராம சேவகர் பிரிவு எல்லைக்குட்பட்ட "பம்மைவெளி" குளி பத்து (குளி 10) வீடும் கிணறும். வான்பயிர் செய்பயிர்களும் இதற்கெல்லைகள்.-

கிழக்கு : சேமக்காலை வீதியும்.
வடக்கு : பிலிப் ஜேசுதாஸ் கைம்பெண் செல்வராணியின் ஆதனம்.
மேற்கு : பிரான்சிஸ் கைம்பெண் அடைக்கலத்தின் ஆதனம்.
தெற்கு : திரவியம் அந்தோனிப்பிள்ளையின் உரித்தாளரின் ஆதனமும். இதடங்கலும்

தற்போது இரத்தினம் அமலசேகர் பெண் மேரிகேட்டி இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது அமலசேகர் பெண் மேரிகேட்டி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**யாழ். மாநகரசபை.**

(cr.41580) (N-1)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சுந்தரலிங்கம் இலக்சுமி



எமது கல்வியியற் கல்லூரியின் விரிவுரையாளர் திருமதி தர்மஜீலன் ஜானகி அம்மா அவர்களின் அன்புத் தாயார் அமரர் சுந்தரலிங்கம் இலக்சுமி அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 18.03.1947
மறைவு 18.01.2024

தகவல்:
கல்லூரிச் சமூகம்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி

# புதுக்குடியிருப்பு பிரதேச சபை
## புதுக்குடியிருப்பு

## திருமுறிகண்டி கட்டணக் கழிப்பறை
## குத்தகை கேள்வி அறிவித்தல் - 2024

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கு சொந்தமான திருமுறிகண்டி கட்டணக் கழிப்பறை குத்தகையிடல் வாடகைக்கு விடுவதற்கான கேள்வி கோரப்படுகின்றது.

**கேள்விப் பத்திரங்கள் வழங்கும் காலம்** :- 19.01.2024 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 26.01.2024 பிற்பகல் 01.30 மணிவரை (அலுவலக நாட்களில் மட்டும்)

**கேள்வி திறக்கப்படும் திகதி** :- 26.01.2024. பிற்பகல் 02.00 மணி

| ஆதனத்தின் பெயர் | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதர வரிகள் தவிர) |
|---|---|---|---|
| திருமுறிகண்டி கட்டணக் கழிப்பறை | ரூபா. 2,000.00 | ரூபா. 4,000.00 | ரூபா. 77,000.00 |

1. கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளும் **தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு.** என முகவரியிட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப்பெறல் வேண்டும். கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்
2. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
3. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் தாங்கள் தெரிவுசெய்யப்பட்ட திகதியிலிருந்து 03 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை 6 சம பங்குப் படி மாசி தொடக்கம் ஆடி வரையான காலப் பகுதிக்குள் அவ் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னைய வேலை நாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும்.
4. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் பிரதேச சபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருப்பதுடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஓர் ஆவணத்தின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிட சான்றிதழின் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**புதுக்குடியிருப்பு பிரதேச சபை,**
**புதுக்குடியிருப்பு.**
**2024.01.19.**
**தொலைபேசி இல:- 0212291023**
**E-mail: pkipsmullai@gmail.com**

(CR 41584) A-1

**யாழ்ப்பாண வர்த்தக கண்காட்சியில்**
**FAIR PHARMA (PVT) ITD**

இக்கண்காட்சியில் எமது 154 வது காட்சிக்கூடத்திற்கு வருகை தந்து ஆயுள்வேத வைத்தியர்களிடம் இலவச மருத்துவ ஆலோசனைகளுடன் எமது சிறந்த மருந்துகளை பெற்று பயன்பெறுங்கள்.
யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஜனவரி 19ம் திகதி முதல் 21ம் திகதி வரை காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை நடைபெறும்.

**இதயத்தின் முக்கியத்துவம்**
இதயநாடி நோய்கள் மீள்நிலைக்கு....
நாடி அடைப்புகள் கரைக்கப்படுகின்றன....
எமது முறை எவ்வித அறுவை சிகிச்சைகளுமற்றது

சத்திரசிகிச்சையும், ஸ்ரென்ட் பதித்தலும்தான் சிகிச்சை முறைகளாக நாடி அடைப்புகளுக்கு பரிகாரமாக இருந்தது. எங்கள் இயற்கை மூலிகை தயாரிப்புகள் குறைந்த விலையில், அடைப்புகளை கல்சியப்படிவுகளாக இருந்தாலும் கூட மாற்றுப் பரிகாரமாக அமைகின்றன.

உலகப்பார்வையில் சத்திரசிகிச்சைதான் நாடி அடைப்புகளுக்கு பரிகாரமாக கருதப்படுகிறது

எங்களால் குணப்படுத்தப்படுகிறது
இருதய நோய்
நோய் எதிர்ப்பு சக்தி
புற்றுநோய் தணிப்பு
ஈரல் பாதிப்புகள்
மூட்டு வாதம்
மூட்டு வலி, முதுகு வலி
ஒற்றைத்தலைவலி
புழையழற்சி
மன அழுத்தம்
இருமல் / சளி
படுக்கை புண்கள்
நாட்பட்ட காயங்கள்
நீரிழிவு நோய்கள்
வைரஸ் தொற்றுக்கள்
பாலியல் குறைபாடு
புரொஸ்டேற் பிரச்சினைகள்



* இலவச மருத்துவ ஆலோசனை வழங்கப்படும்

Hotline:
0777708310
0742570645
0777555600
Tel: 0114388102

FAIR PHARMA (PVT) LTD
( AYURVEDIC MEDICINE )
இல. 492/06, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
Web: www.ayurveda.lk E-mail: info@ayurveda.lk
APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச வர்த்தகக் கண்காட்சி இன்று ஆரம்பமாகின்றது

## யாழ். முற்றவெளியில் மக்கள் திரள்வர்

யாழ்ப்பாணம், ஜன.19

இன்று ஆரம்பமாகவுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தக சந்தைக்கு 64 ஆயிரம் பார்வையாளர்களை எதிர்பார்த்துள்ளோம் என்று யாழ். வர்த்தக தொழில்துறை மன்றத்தின் தலைவர் கே. விக்னேஷ் தெரிவித்தார்.

லங்கா எக்ஸிபிஷன் நிறுவனம் மற்றும் யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றம் இணைந்து இன்று முதல் எதிர்வரும் 21ஆம் திகதிவரை யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தச் சந்தையை 14 ஆண்டாக ஏற்பாடு செய்துள்ளது. இந்த வர்த்தக சந்தை யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே கே. விக்னேஷ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சிறந்த தொழில் முயற்சியில் ஈடுபடும் முதலீட்டாளர்களை ஊக்குவித்து, மேம்படுத்தும் வகையில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கண்காட்சியில் 350 காட்சிக் கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கட்டடத் துறை, தொழில்நுட்பப் பகுதிகள், கனினியியல் துறைப் பகுதிகள், உள்ளூர் உற்பத்திக் காட்சிக் கூடங்கள், வெளிநாட்டு கல்வியியற் பிரிவுகள், தனியார் அரச, கல்வியியற் காட்சிக் கூடங்கள், வாகன விற்பனைச் சந்தைகள், சிற்றுண்டி வகைகள், மின்னியல் சாதனங்கள் மற்றும் மின்சாரப் பொருள்கள் இங்கு காட்சிப்படுத்தப்படவுள்ளன.

சிறுமுயற்சியாளர்களுக்கு 10 இலவசக் காட்சிக் கூடங்களும், தொழில்முனைவோருக்கு 10 இலவசக் காட்சிக் கூடங்களும் வழங்கப்படவிருக்கின்றன. சிறிய முதலீட்டைக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இவை வழங்கப்படுகின்றன. இம்முறை தென்னிலங்கை முதலீட்டாளர்கள் சுமார் 2 ஆயிரம் பேர் இங்கு வந்து தங்கள் சந்தைவாய்ப்பை மேற்கொள்ளவுள்ளனர் - என்றார். (அ-எ-27)

நொச்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டது. (அ-ம-113)

### மாவீரர்...

மில்லக் காணியை அளவீடு செய்து வழங்குவதற்காக, நில அளவைத் திணைக்களத்தினர் மற்றும் கரைதுறைபற்று காணி உத்தியோகத்தர்கள் துயிலுமில்லப் பகுதிக்கு வந்தபோது மாவீரர்களின் பெற்றோர், பொதுமக்கள், மக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுஅமைப்பின் பிரதிநிதிகள் இணைந்து வெளிப்படுத்திய எதிர்ப்பையடுத்தே அளவீடுகள் நிறுத்தப்பட்டன. அந்தக்காணியை நிலஅளவீடு செய்து இராணுவத்துக்கு வழங்குவதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று வலியுறுத்தி, நில அளவைத் திணைக்களத்தினரிடம் மனுவொன்றும் கையளிக்கப்பட்டது.

அலம்பில் மாவீரர் துயிலுமில்லக் காணியினை தற்போது 23ஆவது சிங்க ரெஜிமெண்ட் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருப்பதுடன், அங்கு இரணுவத்தினர் விவசாயநடவடிக்கைகளிலும் பொழுதுபோக்கு விடயங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். குறித்த காணியில் இராணுவத்தினரால் உணவகம் ஒன்றும் நடத்தப்பட்டு வருகின்றது. இந்தத் துயிலுமில்லத்தின் வெளிப்பகுதியிலேயே பொதுமக்களால் வருடாவருடம் மாவீரர் அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-246)

### ஜனாதிபதித்...

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் நாட்டில் பல்வேறு கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. அரசாங்கம் தேர்தலை ஒத்திவைக்க முற்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளன. எனினும் தேர்தலை ஒத்திவைக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை என்றும் இவ்வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி அண்மையில் கூறியிருந்தார்.

இவ்வாறிருக்கையில் நவம்பர் மாதம் 18ஆம் திகதியிலிருந்து ஒரு மாதத்துக்கு முன்பாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்றும், அதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்ட நிலையில், அதற்குரிய நிதி வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி.யின் கட்சிக் கூட்டமொன்றில் முன்னதாகக் கருத்துத் தெரிவித்த, அந்தக் கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க, 'ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதி இலங்கையின் ஜனாதிபதியாக அநுரவைக் குறிப்பிட்டு வர்த்தமானி வெளிவரும்' என்றும் தெரிவித்திருந்தார். எனவே இந்தக் கருத்துகள் மற்றும் உள்ளகத் தகவல்களின் அடிப்படையில், ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல் களத்தில் இதுவரையான நிலைவரத்தின்படி சஜித், அநுர மற்றும் ரணில் ஆகியோர் வேட்பாளர்களாகக் களமிறங்குவது உறுதியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### தமிழரசின்...

மான யோகேஸ்வரன். யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்திருந்த அவர் 'உதயன்' அலுவலகத்துக்கும் வந்து செய்தியாளர் சந்திப்பிலும் பங்கெடுத்தார். இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியத்தின் பாதையில் தடம்மாறாது பயணிக்க வேண்டும். அதுவே என் விருப்பம். தமிழரசுக் கட்சியின் தலைவர் தெரிவுக்கு மும்முனைப் போட்டி நிலவுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வெற்றிபெற்றால் தமிழ்த் தேசியப் பாதையிலிருந்து தமிழரசுக் கட்சி நிச்சயம் தடம்மாறும். ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக அவர் இருந்தபோது, வெளிப்படுத்திய கருத்துகளும் அதன்மூலம் தமிழரசுக் கட்சியும் கூட்டமைப்பும் எதிர்கொண்ட விமர்சனங்களும் ஏராளம். நடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் வெற்றி பெற்றால், தமிழ்த் தேசியப் பாதையில் தமிழரசுக் கட்சி பயணிக்கும்.

இதேவேளை - தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தலைக் குழப்புவதற்கும் சதி முயற்சிகள் இடம்பெறுகின்றனவா? என்றும் அச்சப்பட வேண்டியுள்ளது. ஏனெனில், வாக்களிக்கத் தகுதியான பொதுச்சபை உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் இன்னும் இற்றைப்படுத்தப்பட்டு முறைப்படி அறிவிக்கப்படவில்லை. அழைப்புக்கடிதம் எவருக்கும் வந்து சேரவில்லை. இவை பற்றி கட்சித் தலைவருக்குத் தெரியப்படுத்தி அவற்றை விரைந்து சீராக்குமாறு அழுத்தம் கொடுக்கவே, நான் யாழ்ப்பாணத்துக்கு வந்தேன் - என்றார். (அ-ம)

### 143 கிராம்...

2018ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது 143 கிராம் ஹெரோய்னுடன் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிராக கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கு தீர்ப்புக்காக கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி எ.எம்.ஏ. சகாப்தீன் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் ஒருவர் (இரண்டாம் எதிரி) நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டார். முதலாவது எதிரிக்காக சட்டத்தரணி ஸ்ரீகாந்தா முன்னிலையானார். சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் அரச சட்டத்தரணி என்.என்.அர்ஜுனகுமார் முன்னிலையாகினார்.

எதிரி சார்பாக ஆஜரான சட்டத்தரணி, குறித்த எதிரியானவர் இதற்கு முன்னர் குற்றங்கள் எதிலும் ஈடுபடவில்லை. அவர் இரண்டு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்டு சிறுநீரக மாற்று சிகிச்சை பெற்றுள்ளவர். மூன்று பிள்ளைகளின் தந்தையாகவும் காணப்படுகின்றார். இவற்றைக் கருத்திற்கொண்டு தண்டனைக் குறைப்புச் செய்யப்படவேண்டும் என்று வாதிட்டார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பாக ஆஜரான சட்டத்தரணி, எதிரிக்கு வழங்கப்படும் தண்டனை ஒரு முன்மாதிரியான தண்டனையாக இருக்கவேண்டும். இந்தத் தண்டனை தனிநபருக்கான தண்டனையாக அல்லாமல் எதிர்கால இளம் சமூகத்தைப் பாதுகாக்கும் வகையிலான தண்டனையாக அமைய வேண்டும் என்று சமர்ப்பணத்தை முன்வைத்தார். சமர்ப்பணங்களையடுத்து குற்றவாளிக்கு ஆயுட்காலத் தண்டனை வழங்கி நீதிபதி தீர்ப்பிட்டார். (அ-ம-113)

### பல்கலை...

வடமாகாணத்தில் உள்ள பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களால் அந்தந்தப் பல்கலைக்கழகங்களில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முற்பகல் தொடக்கம் நண்பகல் வரையில் இந்தப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களுக்கு ஊதிய அதிகரிப்பு வழங்கப்படவேண்டும், ஊதியம் தொடர்பில் தற்போதுள்ள முரண்பாடுகள் நிவர்த்திக்கப்படவேண்டும், அரச பல்கலைக்கழக முறைமைகள் தொடர்ந்தும் உயிர்ப்புடன் வைத்திருக்கப்பட வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள். (அ-ம-66-110)

### சிறுமிக்குப்...

2016ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேற்படி பூசகர் கைதுசெய்யப்பட்டு அவருக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதிவான நீதிமன்றத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் வழக்குத் தொடரப்பட்டது. வழக்கின் விசாரணைகள் முடிவுற்ற நிலையில், நேற்றையதினம் தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன்போதே குற்றவாளியான பூசகருக்கு 12 ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அத்துடன் பூசகர் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்த வேண்டும் என்றும் 2 இலட்சம் ரூபா இழப்பீடு செலுத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் மேலும் உத்தரவிட்டது. (அ-ம-113)

### ரயில்...

மோதுண்டு ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

முறிகண்டிப் பகுதியைச் சேர்ந்த கேதீஸ்வரன் விஜயானந்தன் (வயது-43) என்பவரே உயிரிழந்தவராவார்.

அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த யாழ். ராணி ரயிலுடன் மோதுண்டதிலேயே இந்த உயிரிழப்பு சம்பவித்துள்ளது. சடலம் கிளி

### புதிய விசா...

இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய விசா நடைமுறை இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் அமுலுக்கு வரும் என்று குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் எச்.ஜே. இலுக்பிட்டிய தெரிவித்தார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இதுவரை அமுலில் இருந்த விசா நடைமுறை மாற்றப்பட்டு, அது இலகுபடுத்தப்பட்டு புதிய விசா நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஓரிரு வாரங்களுக்குள் புதிய நடைமுறை அமுலுக்கு வரும்.

இதன்படி சுற்றுலா பயணி ஒருவர் இலங்கைக்கு வந்த பின்னர், இலங்கையிலிருந்துகொண்டே ஒரு மாதத்துக்குப் பின்னர் விசா நீடிப்புப் பெறலாம். புதிய நடைமுறையின் பிரகாரம் வெளிநாட்டில் இருந்துவரும்போதே தேவையான விசாக்காலத்தை எம்மிடம் பெற்று வரலாம். இணைய வழி ஊழியர்கள் இலங்கை வந்து தங்கியிருந்து தொழில் செய்வதற்கும் புதிய விசா நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், முதலீட்டாளர்களுக்கும் விசா நடைமுறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. 10 வருடங்கள்வரை விசா பெறக்கூடிய ஏற்பாடுகளும் உள்ளன. அதேபோல நிரந்தர வதிவிட விசாவை வழங்குவதற்கான திட்டமும் உள்ளது. அதற்கான திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது' - என்றார். (அ-ம-44)

### 24,000...

சந்தேகநபரொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். போதை மாத்திரைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளன என்று தாழ்வுபாடு கடற்படைக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சிறப்புச் சுற்றிவளைப்பிலேயே மேற்படி சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். 24 ஆயிரம் போதை மாத்திரைகள் அவரிடமிருந்து மீட்கப்பட்டுள்ளன. (அ-ம-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடப்புத்தகங்களில் பசுக்களுக்கு இடம்

## வலியுறுத்தி மனு கையளிப்பு

**யாழ்ப்பாணம், ஜன. 19**

**பசுக்களின் முக்கியத்துவத்தை மாணவர்களுக்குக் கடத்தும் வகையில், பசுக்கள் தொடர்பான விடயங்களை பாடத்திட்டங்களில் உள்ளடக்க வேண்டும் என்று வலியுறுத்தி கல்வி அமைச்சின் சமயபாடம் தொடர்பான பிரதான ஆலோசகரிடம் மனு கையளிக்கப்பட்டுள்ளது.**

பசுக்கள், இடபங்களைப் பாதுகாக்கும் சகல சமய நிறுவனங்களின் இணையத்தினரால் இந்த மனு கையளிக்கப்பட்டுள்ளது.

பட்டிப்பொங்கல் விழா நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை யாழ்.நகரில் அமைந்துள்ள சத்திரத்து ஞானவைரவர் ஆலயத்தில் இடம்பெற்றது. இதன்போதே இவ்வாறு வலியுறுத்தப்பட்டு மனு கையளிக்கப்பட்டது. மட்டக்களப்பு, மயிலத்தமடுவில் பசுக்களுக்கும், காளைகளுக்கும் இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக சிங்கள - பௌத்த பீடங்கள், பௌத்த துறவிகள் குரல் கொடுக்க முன்வர வேண்டுமெனவும் இதன்போது எடுத்துக் கூறப்பட்டது. (ம-66)

# குடும்பநல தாதியர்கள் கிளி.யில் ஆர்ப்பாட்டம்

கிளிநொச்சி சுகாதார குடும்பநல அலுவலர்கள் மற்றும் தாதியர் களால் நேற்று வியாழக்கிழமை வேலைநிறுத்தப் போராட்டம் கிளிநொச்சி மருத்துவமனை முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

மருத்துவர்களுக்கு அதிகரிக்கப்பட்ட 35 ஆயிரம் ரூபா கொடுப்பனவை தமக்கும் வழங்குமாறு கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச-113)

# இலங்கை - இந்தியா இடையிலான படகுச்சேவை இவ்வாரம் ஆரம்பம்!

கொழும்பு, ஜன.19

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான படகுச் சேவை இந்தவாரம் ஆரம்பமாகும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள் ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே மேற்படி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா பிரதேச செயலகம் தொடர்பில் எமது திணைக்களத் துக்குப் பிரச்சினை நிலவியது. அரச அதிபருடன் கலந்துரையாடி, புதிய கட்டடத் தொகுதியில் அலுவலகம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பெப்ரவரி மாதத்துக்குள் அலுவலகம் திறக்கப்படும். வடக்கில் உள்ள அனைவரும் இலகுவில் கடவுச்சீட்டுப் பெறும் வகையில் நடவடிக்கை இடம்பெறும்.

காங்கேசன்துறை படகுச் சேவை ஆரம்பமாகவுள்ளது. இந்த வாரத்துக்குள் இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான படகுச் சேவை ஆரம்பமாகின்றது. இதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளும் நிறைவுபெற் றுள்ளன.

அதேவேளை, இவ்வருடத்துக்குள் இலங்கையர்களுக்கு இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (எ-44)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்திக்கு அருகாமையில் இராமநாதன் வீதி முகப்புடன் 1 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**யாழ்.பல்கலைக்கழகம்** முன்பாக, மற்றும் இராசபாதை வீதியிலும் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

விலை நேரில் பேசிக்கொள்ளலாம்

**பார்வையிடும் நேரம்: காலை 6 மணி முதல் மாலை 6மணிவரை.**

தொடர்பு: **077 468 3354**

(CS 27707) S-1

**வீடு வாடகைக்குத் தேவை**

நல்லூர் மற்றும் நாவலர் வீதியை அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

076 659 0925, 070 777 6489

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் கிருஷ்ணன் கோவிலின் தேர் முட்டிக்கு முன்பக்கமாக உள்ள நான்கு பரப்புக்காணி விற்பனையாக உள்ளது. தோட்டம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் ஏற்ற இடம்

077 645 0381, 077 221 4162

**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் நாவற்குழி A-9 வீதியுடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**


- நிலப்பரப்பு
- நல்ல சூழல் நன்னீரூற்று
- நாவற்குழிச் சந்தியிலிருந்து 3/4 Km
- வடமாகாண சபை 300m
- கைதடிச் சந்தி 1Km மெயின்றோட்டுடன் உள்ளது
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**071 1733 911**
**076 8535 022**

(CS 53539) S-1

**மரண அறிவித்தல்**

தோற்றம் 01 . 10 . 1950



மறைவு 17 . 01 . 2024

**இரத்தினம் செல்வேந்திரன்**

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி கோணேஸ்வரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் செல்வேந்திரன் நேற்றுமுன்தினம் (17.01.2024) செவ்வாய்க்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் பூபதி தம்பதியரின் அன்பு மகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், பாலதர்மர், அழகாதேவி, நித்தியானந்தம், அழகநாயகி, காலஞ்சென்ற சிறீகாந்தன் மற்றும் ரதி, லோஜினி ஆகியோ ரின் அன்புச் சகோதரரும், பூபாலசிங்கம், நவரத்தினம், அருள்மாணிக்கம், செல்வகுமார், அருந்தவராணி, சிவயோகநாதன், ஜெயகுணநாதன், ஜெயவதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2024) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் 43, கூழாவடி ஒழுங்கை ஆனைக்கோட்டையில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையான்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43, கூழாவடி ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.
077 639 3745

தகவல்:
குடும்பத்தினர்

(CS35578) N-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : .news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 19.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org